பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**20 01 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களுக்கும் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் கடும் கண்டணம் தெரிவித்துள்ளன.

**2.** மும்பை-அகமதாபாத் இடையேயான புல்லட் ரயில் திட்டம் சீரான முன்னேற்றத்தைக் கண்டு வருவதாக மத்திய இரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**3.** கர்நாடகாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் வாக்குச் சீட்டு முறை பயன்படுத்தப்படும் என்ற முடிவு பிற்போக்குத்தனமானது என்று மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி குறை கூறியுள்ளார்.

**4.** ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

**5.** கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் லே-யில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

**எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட தீவிரவாதத்தின் அனைத்து வடிவங்களுக்கும் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் கடும் கண்டணம் தெரிவித்துள்ளன.**

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அந்நாட்டு அதிபர் திரு ஷேக் முஹமது பின் சையது அல் நயான் புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்பு, விண்வெளி, எரிசக்தி, உணவுப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

<<<<>>>>

கோவாவின் தென் பகுதியில் அமைந்துள்ள தபோலிம் சர்வதேச விமான நிலையம் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் விமானப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த்துடன் நடைபெற்ற ஆலோசனைகுப் பிறகு, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

மோபாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மனோகர் சர்வதேச விமான நிலையத்தை பயணியர் விமானப் போக்குவரத்துக்காக மாற்றப்பட்டுள்ளதன் மூலம் அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கு தீர்வு காணும் நோக்கில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

மும்பை-அகமதாபாத் இடையேயான புல்லட் ரயில் திட்டம் சீரான முன்னேற்றத்தைக் கண்டு வருவதாக மத்திய இரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பை-அகமதாபாத் இடையேயான புல்லட் ரயில் திட்டம் சீரான முன்னேற்றத்தைக் கண்டு வருவதாக மத்திய இரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ரயில் வழித்தடத்தில் மின்மயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சீரான முன்னேற்றம் நாட்டின் முதலாவது அதிவேக ரயிலின் மின்சார இணைப்பிற்கான வசதியை ஏற்படுத்துவதில் ஒரு முக்கிய நடவடிக்கை என்றும், 'உற்பத்திக்கான இந்தியா' திட்டத்தின் ,

மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் நடவடிக்கைகளை இது பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கர்நாடகாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் வாக்குச் சீட்டு முறை பயன்படுத்தப்படும் என்ற முடிவு பிற்போக்குத்தனமானது என்று மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி குறை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வாக்குச்சாவடியைக் கைப்பற்றுதல், வாக்குப்பதிவில் மோசடி செய்தல் போன்ற செயல்பாடுகளை தடுக்கும் வகையில் வாக்குப்பதிவு எந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் வாக்குப்பதிவு எந்திரங்கள் குறித்து உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புவதை அம்மாநில அரசு முயன்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

1980ஆம் ஆண்டில் சோதனை அடிப்படையில் முதன் முதலாக பெங்களூருவில் நடைபெற்ற தேர்தலில் வாக்குப்பதி எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதை திரு. பிரல்ஹாத் ஜோஷி சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

பிஜேபி தேசிய தலைவர் குறித்த அறிவிப்பு இன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் தேசிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறைகள் நேற்று தொடங்கின.

தேசிய செயல் தலைவராக பொறுப்பு வகித்து வரும் திரு நிதின் நபின் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்துள்ளதாக அக்கட்சியின் தேர்தல் அதிகாரி டாக்டர் லக்ஷ்மணன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. நிதின் கட்கரி மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரது பெயரை கட்சித் தலைவர் பதவிக்கு முன்மொழிந்துள்ளனர்.

<<<<>>>>

வந்தே மாதரம் என்ற தேசியப் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதைக் குறிக்கும் வகையில், பாதுகாப்புப் படையினரின் சைக்கிள் பேரணி நடத்தப்படவுள்ளதாக மத்திய தொழில் பாதுகாப்புப் படை துணைத் தலைமை ஆய்வாளர் திரு ராகவேந்திர குமார் தெரிவித்தார்.

விசாகப்பட்டினத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடலோர பாதுகாப்பு - வளமான இந்தியா என்ற கருப்பொருளில் இந்த பேரணி நடத்தப்படுவுள்ளதாகக் கூறினார்.

நாடு முழுவதிலும் உள்ள ஒன்பது கடலோர மாநிலங்களில் 6,500 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்த சைக்கிள் பேரணி நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

எட்டு நாட்களில் ஸ்ரீகாகுளம், காக்கிநாடா, மச்சிலிப்பட்டினம், சீராளா, காவெளி, நாயுடுபேட்டை வழியாக 964 கிலோமீட்டர் பயணம் செய்து இந்த சைக்கிள் பேரணி பிப்ரவரி 6 - ம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும் என்று அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து, பிப்ரவரி 7 - ம் தேதி நாட்டின் பாதுகாப்பு,சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கைளை கண்காணிப்பது போன்ற கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்த பேரணி நாட்டுப்பற்றை வளர்ப்பதுடன், பாதுகாப்புப் படையில் சேர வேண்டும் என்ற ஆர்வத்தை இளைஞர்களுக்கு அளிப்பதுடன், உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளவும் உதவிடும் என்றும் அவர் கூறினார்.

இந்த சைக்கிள் பேரணி பிப்ரவரி 22 - ம் தேதி நிறைவடையும் என்றும், இதில் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்கலாம் என்றும் திரு ராகவேந்திர குமார் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக காபூல் பகுதியை சேர்ந்த காவல்துறை செய்தித்தொடர்பாளர் திரு. **Khalid Zadran**, அங்குள்ள உணவு விடுதி ஒன்றில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாக தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளின் தூதரகங்கள், வணிக வளாகங்கள், அலுவலகங்கள் நிறைந்துள்ள இப்பகுதியை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு எந்த தீவிரவாத அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

காஸா அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்குமாறு ஐரோப்பிய ஆணையம், ரஷ்யா மற்றும் தாய்லாந்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிரெம்ளின் மாளிகை செய்தித்தொடர்பாளர் திரு. டிமித்ரி பெஸ்கோவ், ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி **Ursula Von Der Leyen** ஆகியோர் இதனை உறுதி செய்துள்ளனர்.

இதனிடையே இந்த பேச்சுவார்த்தையை நிராகரிக்குமாறு இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காஸா அமைதிப் பேச்சுவார்த்தைக்கான குழு அமைப்பது குறித்து இஸ்ரேல் அரசுடன் எவ்வித ஆலோசனையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்நாட்டுப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சுவிட்சர்லாந்தில் உள்ள டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றத்தின் கூட்டத்திற்கு இடையே இந்த அமைதிப் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை அமெரிக்கா வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

தில்லி, ஹரியானா, பீகார், சண்டிகர், பஞ்சாப் ஆகிய பகுதிலளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சல் பிரதேசத்தில் ஒருசில இடங்களில் இதே நிலை இருக்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவிவரும் காற்றின் தரம் மோசமான நிலையில் தொடர்ந்து நீருக்கும் என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

குளிர்கால கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் லே-யில் இன்று தொடங்குகிறது.

இதில் ஆயிரத்துக்கும் அதிகமான தடகள வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்றுள்ள ஸ்கேட்டிங், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஸ்கேட்டிங் மற்றும ஐஸ் ஹாக்கி விளையாட்டுகளில் 472 தடகள வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் தடகள வீரர்கள் தங்களது முழு திறனையும் வெளிப்படுத்துவதற்கான தளமாக கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டிற்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளுக்கான அட்டவணை ஏற்கனவே இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டு விளையாட்டுப் போட்டிகளுக்கான சூழலை வலுப்படுத்தும் வகையில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தடகள வீரர்கள் தங்களது பன்முகத் திறனை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த விளையாட்டுப் போட்டி அமைந்துள்ளதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

பஹ்ரைன் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரார்த்தன தாம்ப்ரே - ரஷ்யாவின் **Alevtina** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **7-6, 6-2** என்ற செட் கணக்கில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே - சீனாவின் **Wushuang Zheng** இணையை வென்றது.

--------------

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட் ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **61** ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **6** விக்கெட் இழப்புக்கு **178** ரன் எடுத்தது.

**179** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, **8** விக்கெட் இழப்புக்கு **117** ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்து.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் தில்லி அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

**வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**